**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா**. 19**
**Defence**
**Court**

Name : சண்முகவேல்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 17.03.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில், மேலமுத்தராம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். அ.சா.18 எனது உடன் பிறந்த சகோதரர் ஆவார். நான் கூளக்கடை பஜார் சந்திப்பில் முத்து டீ ஸ்டால் என்ற பெயரில் டீக்கடையில் கூட்டாக நானும் என் அண்ணனும் நடத்தினோம். இவ்வழக்கின் எதிரிகள் யாரையும் தெரியாது. குமார்பாண்டியனின் சகோதரர்கள் சக்திபாண்டியன், சேகர் ஆகியோரை தெரியாது. நான் வழக்கம் போல் 7.00 மணிக்கு கடைக்கு வந்து விட்டேன், சம்பவத்தினத்தன்று பிரச்சனை என்று சொன்னார்கள் அதனால் காலை 8.00 முதல் 9.00 மணிக்குள் பரப்பரப்பாக

இருந்ததால் நாங்கள் கடையை மூடிவிட்டோம். எனக்கு இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின் போது நான் தென்காசி கூளக்கடை பஜார் எல்.ஆர்.எஸ் பாளையம் சந்திப்பில் நானும், என் அண்ணனும் டீக்கடை நடத்தி வருவதாகவும் எங்கள் ஊரில் 17.12.2006 ம் தேதி குமார்பாண்டியன் என்பவர் கொலை செய்யப்பட்டதால் அது தொடர்பாக இருதரப்பினருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றும், என் கடைக்கு டீ குடிக்க வரும் நபர்கள் அது சம்மந்தமாக பேசிக்கொண்டிருப்பார்கள் என்றும் கூறியிருக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கம் போல 14.8.2007 ம் தேதி காலையில் சுமார் 10.15 மணிக்கு என் கடைக்கு வெளியே முத்தராரம்மன் கோவில் தென்புறம் சத்தம் கேட்ட போது நான் எட்டி பார்த்தேன் என்றும் அப்போது ஒரு அம்பாசிட்டர் காரும், ஒரு இருச்சக்கர வாகனமும் கீழே கிடந்தது என்றும், தென்காசி மலையான் கோவில் தெருவைச் சேர்ந்த சேகரை இரண்டு ஆட்டோக்களில் வந்த நபர்களில் ஹனிபா என்பவர் அருவாளால் வெட்டியும், முருகேசன் என்ற அப்துல்லா அருவாளால் வலது முழங்கை மற்றும் இடது முழங்கை பகுதியில் வெட்டியும், அசன்கனி கத்தியால் குத்தியும், அபு ஆயுப் அன்சாரி மற்றும் ராஜா முகமது அருவாளால் வெட்டியும் கொலை செய்தார்கள் என்றும் அதை நான் நேரில் பார்த்தேன் என்றும் சேகரின் அண்ணன் சக்திபாண்டியன் மற்றும் அவரது கூட்டாளிகளை வேறு சிலர் தாக்கி காயப்படுத்தினார்கள் என்றும் சம்பவத்தை கண்டு பயந்து நான் கடையை மூடிவிட்டு ஓடிவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தற்போது செங்கோட்டை விஸ்நாதபுரம் என்ற பகுதியில் உள்ள டீக்கடையில் வேலை பார்த்து வருகிறேன். செங்கோட்டை பகுதியில் இஸ்லாமியர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்றால், தெரியும். நான் தினமும் இரவு 9.00 மணிக்கு இருசக்கர வாகனத்தில் வீடு திரும்புவேன்.

இரவு வீடு திரும்பும் போது போக்குவரத்து குறைவாக இருக்கும் அதனால் எதிரிகளுக்கு பயந்து பொய்சாட்சி கூறுகிறேன் என்றால், சரியல்ல. சம்பவத்தன்று சத்தம் கேட்டது அது பற்றி கேள்விபட்டு தான் கடையை பூட்டிவிட்டு சென்றோம். சம்பவ நாளில் சத்தம் கேட்டு பதட்டமான நிலை என்பதால் தான் கடையை பூட்டினோம் வேறு காரணங்கள் ஏதும் இல்லை. சம்பவ நடந்த நேரம் 9.00 மணியா, 10.00 மணியா அல்லது அதற்கு மேலா என்று என்னால் சரியாக கூற இயலாது. இருதரப்பினரும் சண்டை போட்டுக் கொண்டார்கள் என்றும், கொலை நடந்து விட்டது என்றும் கேள்விபட்டேன். கடையிலிருந்து பார்த்தால் சாலையில் நடக்கும் சம்பவங்கள் தெரியும். இருதரப்பினரும் மத ரீதியாக பிரிந்து மோதிக்கொண்டதாகவும், நான் கடையை வைத்திருந்த தெருவில் சம்பவம் நடந்ததாகவும் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பில் தெரிந்து கொண்டேன். குமார்பாண்டியன் இறந்த விவரம் எனக்கு தெரியாது. பரமசிவம் காலையில் வியாபாரத்திற்கான பலகாரங்கள் தயாரித்துக் கொண்டிருந்தார். அதற்கான இடம் அடுத்த தெருவில் உள்ளது. செல்லும் வழியில் பரமசிவத்தையும் தகவல் கூறி அழைத்து சென்றுவிட்டேன். இறந்த போன சேகரின் உடலை என் கடையின் முன்பாக கைப்பற்றியதாக நான் எதையும் கேள்விபடவில்லை. சேகர் மற்றும் சுரேஷின் பிரேத விசாரணையின் போது நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் 14.8.2007ம் காலை 10.15 மணிக்கு கடையில் இருந்த போது தான் சம்பவம் நடந்தது என்றும் எனக்கு எதிரிகளையும், இறந்து போன சேகரையும், சக்திபாண்டியனையும் தெரியும் என்றும் இவ்வழக்கிற்காக வேண்டுமென்றே சம்பவம் பற்றி தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**